Registered as a News Paper in Sri Lanka    பக்கங்கள் 04    விலை ரூபா 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ௵ புரட்டாதி ௴ 03 உ புதன்கிழமை (19-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் 28 ஓசை 213

## மதவாச்சியில் இருபத்திமூன்று லொறிகள் தடுத்துவைப்பு

(வவுனியா)

கொழும்பிலிருந்து வவுனியாவிற்குப் பொருட்களை ஏற்றிவந்த இருபத்திமூன்று லொறிகள் மதவாச்சி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. கடந்த 11ஆம் திகதி கொழும்பில் இருந்துவந்த லொறிகளில் டீசல், மின்கலம் போன்ற பொருட்கள் காணப்பட்டதாலேயே இந்த லொறிகள் இராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. இராணுவத்தினரால் (4ஆம் பக்கம் பார்க்க)

### தமிழருக்கெதிரான நடவடிக்கையில் முஸ்லிம் சமூகவிரோதிகள் தீவிரம்

# திருமலையில் 3 மாதத்தில்

# 1000 தமிழர் படுகொலை

## திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ரூபன் தகவல்

(திருமலை)

*திருமலை மாவட்டத்தில் பகிரங்கமாகவும், இரகசியமாகவும் கடந்த 13-06-90இற்குப் பின்னர் 1000ற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்றும், 30,000ற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள் என்றும் திருமலை மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் ரூபன் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்*

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; 13-06-90க்கு முன்னர் திருமலை மாவட்ட தமிழ் மக்கள் சிங்களஇராணுவத்தினராலும் ஊர்காவல் படையினராலுமே தாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் வந்தார்கள் என்றும், தற்பொழுதுமுஸ்லிம் சமூக விரோதிகள் சிலரும் இக்கொலைகளைச் செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த முஸ்லிம்சமூக விரோதிகள் தமிழ்ப் பெண்களை மானபங்கம் செய்தும், தமிழர் சொத்துக்களைக் கொள்ளையடித்தும்உள்ளனர் எனவும்இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது.

குறிப்பாக கிண்ணியா, கந்தளாய், மூதூர், தோப்பூர், நிலாவெளி இறக்கக்கண்டி ஆகியபகுதிகளில்தமிழ்பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாரிய இழப்புக்களு (4ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் இராணுவம் முடக்கம்

(முல்லைத்தீவு)

விடுதலைப் புலிகளின் சிலாவத்தை - கள்ளப்பாடு தாக்குதல்களால் சிறிலங்கா இராணுவத்தினர் டகிரங்கவேலைப் பகுதிககட்டிடச் சந்திக்கும் மகாவித்தியாலயத்துக்கும் இடையில் உள்ள கட்டிடங்களில் முடங்கிக்கொண்டனர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற பொதுமக்கள், அங்கு பல இராணுவத்தினரின் கால்கள் அரைகுறையாக எரிந்தநிலையில் இருக்கக் கண்டார்கள். இப்பகுதி வீடுகளும் கடைகளும் எரிக்கப்பட்டும், குண்டுவீச்சினால் தகர்க்கப்பட்டும் காணப்பட்டன. (58)

## மாவீரர் நாள் சுவரொட்டிகள்

முதலாம் மாவீரர் நாள் தொடர்பாகக் கடந்த வருடம் எமது இயக்கம் இரண்டு விதமான சுவரொட்டிகளையும், றோஜாப்பூ பொறிக்கப்பட்ட அட்டை ஒன்றையும் மக்களுக்குக் கொடுத்துள்ளது.

அதேபோல இம்முறை நடைபெறவுள்ள இரண்டாவது மாவீரர் நாள் விழாவிற்குப் பொருத்தமான சுவரொட்டிகளினதும், அட்டைகளினதும் மாதிரிகளை வரைந்து அனுப்புமாறு மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

படங்களை முழுமையாகவரைந்து அனுப்பலாம். வர்ணங்கள் கிடைப்பது அரிதாயின் வரையப்படும் படங்களில் என்னென்ன வர்ணங்கள் எங்கெங்கு தீட்டப்பட வேண்டும் என்பதைக் குறித்துவிட்டாலே போதுமானது எதிர்வரும் முதலாம் திகதி (1-10-90) க்கு முன்னர் எமது பிரதேசக் காரியாலயங்களில் அல்லது ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு வேண்டுகின்றோம்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

## முஸ்லிம் பள்ளிவாசல் மீது நேபாம் குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் நேற்று நண்பகல் அளவில் வை-12ரக விமானம் தொடர்ந்தும் இரசாயன நேபாம் எரிகுண்டுகளை வீசியது. இவைபெரும் தீப்பிழம்பும் புகைமண்டலமுமாக யாழ். போதனா வைத்தியசாலை முன்வீதியிலுள்ள போறாபாய் முஸ்லிம் பள்ளிவாசல்களிலும் அதைச் சூழவுள்ள குடிமனைகளிலும் விழுந்து வெடித்தன. (றெ)

## லஞ்சம் கோரி தடைமுகாம்களில் இராணுவத்தினர் மிரட்டல்

(வவுனியா)

வவுனியா நகரபபகுதியிலிருந்து உணவுப் பொருட்கள் ஏற்றிக்கொண்டுகிராமங்களை நோக்கிவரும் கூட்டுறவுச்சங்க லொறிகள் உட்பட வேறுபல லொறிகள் இராணுவத் தடைமுகாம்களில் வைத்து இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்படுகின்றன.

மேற்படி தடைமுகாம்களில் உள்ள இராணுவத்தினர் லொறிச் சாரதிகளிடம் அல்லது லொறிகளுக்குப் பொறுப்பானவர்களிடமிருந்து பெருந்தொகையான பணத்தை அறவிடுகின்றனர்.

பணத்தைக் கொடுக்காமல் விட்டால் லொறிகளை தீ வைத்துக் கொளுத்தி அவற்றுள் இருப்பவர்களை சுட்டுக் கொலை செய்து விடுவோம் என்று இராணுவத்தினர் மிரட் (4ஆம் பக்கம் பார்க்க)

## பயிர்ச் செய்கைக்கென நிலம் வழங்கும் திட்டம்

பயிர்ச்செய்கையில் ஈடுபட விரும்பும் நிலமற்றவர்களுக்கு பயிர்ச் செய்கைககான நிலம் வழங்க விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி திட்டமிட்டு வருகிறது. இதற்கான படிவம் இரண்டாம் பக்கத்தில் உள்ளது. இப்படிவத்தை நிரப்பி 1 10 90 க்கு முன் உங்கள் பிரதேசத்திலுள்ள விடுதலைப்புலிகளின் காரியாலயத்திலோ அல்லது ஈழநாதம் காரியாலயத்திலோ ஒப்படைக்கவும்.

## ஆர். பி. டி. ரக எல். எம். ஜி மீட்பு

(யாழ்ப்பாணம்)

கோட்டைப்பகுதியில் இருந்து மேலும் ஒரு ஆர்.பி.டி ரக எல். எம். ஜி விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது கோட்டை முற்றுகை உடைப்பு முயற்சியில் ஈடுபட்டு பலியான இராணுவத்தினரின் உடல்களை அகறறும் போது கைப்பற்றப்பட்டது. (க)

## யாழ் வீதியில் ஷெல்லுக்கு ஒருவர் பலி; பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் பொதுமக்கள் செறிந்து வாழும் யாழ் வீதியில்விழுந்து வெடித்தது. இதனால் ஒரு குடும்பத்தைச்சேர்ந்த ஒருவர் மரணமடைந்ததுடன்; பலர் படுகாயமடைந்தனர்.

திருமதி கமலாதேவி தியாகராஜ் (வயது 40) மாணமடைந்தார். தியாகராஜ்(வயது45) கீதா (வயது 19)சேகர்(வயது (4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கைகளால் கிராமசேவகர்கள் இடம்பெயர்வு

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் சேவையாற்றி வந்த ஐந்து முஸ்லிம் கிராமசேவையாளர்கள் ஸ்ரீலங்கா அரசின் இராணுவநடவடிக்கைகளுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

சின்னச்சிப்பிக்குளம், பாவற்குளம், 2ஆம் யூனிற், சூடுவெந்த புலவு, பெரியகட்டு, பெரியதம்பனை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் சேவைசெய்துவந்த கிராம சேவையாளர்கள். இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு அஞ்சி இடம் பெயர்ந்து வேறிடங்களுக்குச் (4ஆம் பக்கம் பார்க்க)

# மணியம்தோட்டத்தில் எரிகுண்டுக்கு இரு குழந்தைகள் உட்பட மூவர் பலி

(ஈச்சமோட்டை)

மணியன் தோட்டப் பகுதியில் நேற்று முன்தினம் பி.ப 6.30 மணியளவில் இரண்டு அவ்ரோ குண்டுவீச்சு விமானம் மாறி மாறி மூன்று குண்டுகளை மணியன் தோட்டத்தில் உள்ள உதயபுரத்தில் போட்டன.

இக்குண்டுகள் பொதுமக்கள் வாழும் குடிசைக்கு மேல் வீழ்ந்து வெடித்ததில் இரண்டு குழந்தைகள் உட்பட மூவர் பரிதாபகரமாக உயிரிழந்தனர் பலர் காயமடைந்தனர்

இதில்மரணமடைந்தவர்கள் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த சுதன் (வயது 6), சுமன்(வயது 9), ரேகா (வயது 18) ஆகியோராகும். அத்துடன் சரோ (வயது 27), மாலா (வயது 14), சோதி(வயது 32) ரதிமலர் (வயது 9), குயின் மேரி (வயது 24), ஜெயகௌசல்யா (வயது 8) மலர்வண்ணன் (வயது 2), கௌசலியா (வயது 4) ஆகியோர் காயமடைந்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விமானத் தாக்குதலுக்கு பெண் மரணம்; மாடுகள் பலி

(அல்வாய்)

நேற்று நண்பகல் 11 45மணியளவில் நெல்லியடியில் கண்மூடிக்தனமாக நடாத்தப்பட்ட பொம்மர் தாக்குதலில் புயோகேஸ்வரி (வயது 29) ஸ்தலத்திலேயே பலியானார். கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த முருகேசு ஆழ்வாப்பிள்ளை அவரது மகன் மகாலிங்கம் ஆகியோர் மயிரிழையில் உயிர் தப்பினர். ஆயினும் அவர்கள் பிரயாணம் செய்த மாட்டு வண்டி சேதத்திற்குள்ளாகி இரு மாடுகளும் அவ்விடத்திலேயே பலியாகின.

இந்தாக்குதலின் போது (4 ஆம் பக்கம் பார்க்க)

### காணி பற்றிய விபரங்கள்

1. காணி அமைந்துள்ள இடம்
2. கிராம சேவகர் பிரிவு;-
3. காணியின் விஸ்தீரணம்;-
4. மேட்டு நிலம்/நெற்காணி:-
5! கடைசியாக உற்பத்திக்கு உள்ளாக்கப்பட்டஆண்டு:-
6. உற்பத்தி செய்யாமைக்கான காரணம்:-
7. காணியின் உரிமையாளர் - தனியார்/அரசு:-
8. தனியார் எனின்-தற்பொழுது நாட்டில்உள்ளாரா¿:-
9. உரிமையாளர் நாட்டில் இருப்பின் அவர் கேட்கும் குத்தகை:-
10. காணியில் விளையக்கூடிய பயிர் வகைகள்:-
1i. வருடம்முழுவதும்உற்பத்திக்குஉட்படுத்தமுடியுமா?:-
12. உற்பத்தியில் பெறக்கூடிய நிகர வருமானம் (அண்ணளவாக:-)

... ..........................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

### உற்பத்தியாளர் சுயவிபரக் கோவை

1. முழுப் பெயர்;-
2. நிரந்தர முகவரி:-
3. தற்போதைய முகவரி (இடம்பெயர்ந்திருந்தால்):-
4. வயது:-
5. திருமணமானவரா?
6. மனைவியின் பெயர்:-
7. பிள்ளைகள் விபரம்;-

| பெயர் | வயது |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

8. தொழில்:-
9. வருட வருமானம்:-
10. தொழில் சார்ந்த பிரச்சினை:-

..........................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

# மின்சாரம் கிடைக்கும் என்பதில் உண்மை எதுவும் இல்லை

(யாழ்ப்பாணம்)

விரைவில் தென்மராட்சிப் பகுதிக்கு மின்சாரம் கிடைக்க உள்ளது என்பதில் எதுவித உண்மையும் இல்லை என வடமாகாண மின்சாரசபை அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஆனையிறவு இராணுவ முகாம் அருகில் இருக்கும் மின்மாற்றியில் உள்ள இணைப்புகள் முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களினால் சேதமடைந்துள்ளது. இந்த இணைப்புகள் மீள இணைக்கப்படும் வரை தென்மராட்சிப் பகுதிக்கோ அல்லது குடாநாட்டில் உள்ள வேறு எந்தப் பகுதிக்கோ தென்பகுதியிலிருந்து வரும் மின்சாரம் கிடைக்கச் சத்தியமில்லை என அவர் கூறினார்.

பொதுவாக யாழ். மாவட்டத்துக்கு மின்சாரத்தைக் கொண்டு வருவது பற்றி அவர் கருத்து வெளியிடுகையில் சுன்னாகத்தில் உள்ள குண்டுவீச்சில் சேதமடைந்த மின்மாற்றிகளை திருத்துவதற்குப் பெருந்தொகை ரூபா பெறுமதியான உபகரணங்கள் கொண்டுவர வேண்டும். அண்மையில் கொழும்பு சென்றுள்ள யாழ், அரசாங்க அதிபர் வடபகுதி மின்சார நிலைமை பற்றி மின்சார சபைத்தலைமைப்பீடத்துடன் பேச்சுகளைத் தொடுப்பார். அவர் திரும்பி வரும் பொழுதே யாழ் மாவட்டத்திற்கு எதிர்காலத்தில் மின்சாரம் கிடைக்குமா இல்லையா என்பது பற்றிய எந்த கருத்துகளையும் என்னால் கூற முடியும் எனவும் அந்த மின்சாரசபை அதிகாரி தெரிவித்தார். (லோ)

## அரிச்சுவடி ஏடுகள்

விஜய தசமி தினத்தன்று பாலர்களுக்கு வித்தியாரம்பம் செய்ய உள்ள சமயஸ்தாபனங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் நேரில் தொடர்பு கொண்டு தேவையான அரிச்சுவடி ஏடுகள், சகலகலாவல்லி மாலை ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்;

மில்க்வைற்
(B-1403) யாழ்ப்பாணம்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



நீயொரு
தீககுச்சு!
தீயின் கருவறை
சுடராக நின்று சோபித்தாய்!
உன் சுடர் முகம்
அக்கினிப் புயலாகவல்லவா
அடித்துக் கொண்டிருக்கிறது.

வல்வெட்டித்துறை வடகிழக்கு,
வல்வெட்டித்துறை தென்கிழக்கு,
பொலிகண்டி மேற்கு,
பொலிகண்டி தெற்கு.

சிற்றூரவைகள்

(B/1393)

## 42 ஆம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம் 01 - 05 - 1973



வீரமரணம் 09 - 08 - 1990

(ஞானம்)

### ஐ. கோபாலகிருஸ்ணன்

(முன்னாள் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய
(மாணவன்)

"ஈழ மண்ணில் வீர மின்னல்
சூழ்ந்து வந்து பகை வெல்லும்
சுழிக்காற்று சூரப்புலி (புலிக்குட்டி)
தமிழ் மண்ணின் மாவீரன் - நீ
சோட்டைப் புல்லர் மனம் நடுங்கிடும்
கோடை இடி எழில் வேங்கை
ஞான விடுதலை சூரியன் - நீ
நெஞ்சம் நிறைந்த வீரப் புதல்வன்"

"யாழ் கோட்டை இராணுவ முகாம் தாக்குதலில் காயமுற்று அச்சு வேலியில் எதிர்பாராத சம்பவத்தினால் வீரமரணமடைந்தார்."

"எங்கள் கனிஷ்ட புத்திரன் அகால மரணமடைந்ததை கேள்வியுற்று நேரடியாக அனுதாபம் தெரிவிதத இயக்கத் தோழர்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யூலன் வீதி,
அச்செழு
நீர்வேலி.
(B/1401)

உன் பிரிவால் வாடும்
தாய்; தந்தை, சகோதரிகள்,
சகோதரர்கள், உற்றார்
உறவினர்கள்.

## 9ஆம் மாத நினைவஞ்சலியும் சிரார்த்திப்பும்

19-09-1990 புதன்கிழமை

மலர்வு 05 -- 05 -- 1950



உதிர்வு 28 -- 12 -- 1989

அமரர் **திரு. தம்பு நடேசு** அவர்கள்
(கொடிகாமம் கண்ணா கூல்பார் உரிமையாளர்)

கண்கலங்காமல் காலமெல்லாம் எமை வளர்த்தீர்
காட்டிக் கொடுத்தவரின் கயமைத்தனத்தினால்
கண்கள் கலங்கவிடடு எம்மைப் பிரிந்தீரே!

கச்சன்வெளி,
பளை.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள்
(R. 632)

## கண்ணீர் அஞ்சலி



சந்ததியின் சந்தர்ப்பம்
கெட்டுவிடும் என்பதற்காக
மக்களை நேசித்த
மக்களின் நேசன்
பூவாக உதிர்ந்து
பூமியிலே வீழ்ந்தான்
மரபு இங்கே
பூவுக்காகப் புலம்புகிறது!

**இராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ்**

எழுதுமட்டுவாள்,
முகமாலை.

(B/1394)

### சிந்தனைக்கு

அனுபவம் என்பது, அதிகப் பணம் செலவாகும் பள்ளி ஆயினும் அறிவிலிகள் வேறு பள்ளியில் பயில மாட்டார்கள்.

- பெஞ்சமின் ஃபிராங்க்ளின்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 19-09-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த பெ. எண் 05

# குஜ்ரால் எப்படி 'விளையாடுவார்?'

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் புதிய இராஜ தந்திர முயற்சியாக இந்திய வெளியுறவு அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் இலங்கை வரவிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை வரும் முதல் இந்திய அமைச்சரல்ல குஜ்ரால். இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக முன்னாள் வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவ் தொடங்கி முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி வரை பல அமைச்சர்களும் இராஜ தந்திரிகளும் அதிகாரிகளும் பலமுறை இலங்கை வந்து போயுள்ளனர்.

ஆனால் இதுவரை இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவால் ஆக்கபூர்வமான எந்தக் காரியத்தையும் நிறைவேற்ற முடியவில்லை ஏனெனில் ஒருபுறம் சிறிலங்கா அரசு இந்தியாவின் காலைவாரியது. மறுபுறம் ஏமது உரிமை அடைவு வைக்க முடியாததும், சமரச எல்லைகளுக்கு அப்பாற்பட்டதுமாகும்.

இந்நிலையில் தற்பொழுது நடைபெறும் தமிழர் படுகொலைகள் கேட்டு கவலையுடனும், கவனிப்புடனும் இலங்கை வரும் அமைச்சர் குஜ்ராலுக்கு தமிழ் மக்கள் சார்பில் சில விடயங்களை நாங்கள் ஞாபகப்படுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

முதலில் நாம் குறிப்பிடவேண்டியது இலங்கையில் உள்ள இராஜதந்திரிகள், இந்தியாவில் உள்ள இராஜ தந்திரிகளை விட எந்தவிதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பதாகும்.

எடுத்துக்காட்டாக 1983ஆம் ஆண்டிற்குப் பின் இலங்கை வந்த இந்திய இராஜதந்திரிகளில் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தெளிவாக உணர்ந்திருந்தவர்களை இந்திய இராஜதந்திர வட்டாரங்களில் இருந்தே வெளியேற்றி தமக்குச் சாதகமான போக்குடையவர்களை இராஜதந்திர வட்டாரங்களில் நிலைநிறுத்தியதைக் கூறலாம்.

அடுத்ததாக தமிழரை இனப்படுகொலையில் இருந்து காப்பாற்றுவதாகக் கூறிக்கொண்டு இலங்கைவந்த இந்திய இராணுவத்தைக்கொண்டே தமிழரைப் படுகொலை செய்ததைக்கொள்ளலாம்.

இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தைப்பற்றி இந்தியா பெரிதாக விளம்பரப்படுத்திக் கொண்டிருந்த போது அந்த ஒப்பந்தத்தைப்பற்றி இலங்கை அரசாங்கம் எள்ளிநகையாடியது.

இந்திய இராஜதந்திரிகளாலும், அரசியல்வாதிகளாலும் பெரிதாகப் புகழப்பட்ட ஒப்பந்தத்தைப்பற்றி அன்றைய இலங்கைத் தலைவரின் கருத்துக்கள் இந்த ஒப்பந்தத்தில் இந்தியா அடைந்த தோல்வியை சிறப்பாக வெளிப்படுத்துகின்றது.

விடுதலைப் புலிகளுக்கும், இந்திய இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற சண்டையைப்பற்றி வெற்றிப்பெருமிதத்துடன் குறிப்பிட்ட அன்றையஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனா, ஒப்பந்தத்தின் முன் சிங்கள இளைஞர்கள் இறந்துகொண்டு இருந்தார்கள். நாம் செலவு செய்துகொண்டிருந்தோம். ஒப்பந்தத்தின் பின் இந்திய ஜவான்கள் இறந்து கொண்டிருக்கின்றார்கள். இந்தியா செலவு செய்கிறது' என்றார்.

வேறொரிடத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா குறிப்பிடும்போது 'முன்னர் நாங்களும், புலிகளும் விளையாடினோம். இந்தியா மத்தியஸ்தம் வகித்தது. இன்று புலிகளும் இந்தியாவும் விளையாடுகின்றன நாம் மத்தியஸ்தம் வகிக்கிறோம் என்றார்.

இலங்கையிடம் இருந்து முன்னர் பெற்ற இந்த அனுபவங்கள் தற்பொழுது இலங்கை வரவுள்ள இந்திய வெளியுறவு அமைச்சருக்கு மிகவும் அவசியம் ஏனெனில் எப்படி இலங்கை அரசுடன் 'விளையாட' வேண்டும் என்பதற்கு அது சிறந்த ஓர் படிப்பினையாகும்.

# திலீபன் உன்னைத் தொடர்ந்து....

*திலீபன்...*

*நீ உயிரோடு இருக்கும் போதே உன் இரங்கல் கூட்டம் நடந்தது.*

*உன்னை வளைத்து மக்கள்கடல் எங்களை விட்டுப் போகிறாய்- எங்கே அண்ணா போகிறாய்? ஒரு கவிதை - நீ உயிரோடு உட்கார்ந்திருந்த மேடையில் ஒலிக்கிறது.*

*நீ சிரிக்கிறாய்*
*மக்கள் அழுகிறார்கள்*
*உன் சாவு எங்களுக்கு உயிர் தரும்? ஒரு தங்கை மேடையில் முழங்குகிறாள்*

*கொஞ்சம் கொஞ்சமாய் உயிர் கரைந்துகொண்டிருக்க நீ மீண்டும் சிரிக்கிறாய்.*

*மக்கள் அழுகிறார்கள்*

*திலீபன்...*

*நீ உயிரோடுஇருக்கும்போதே உன் இரங்கல் கூட்டம்நடந்தது.*

*உலகத்தின் கண்களைதிறக்க நீ உன கண்களை மூடினாய்.*

*திலீபன்...உன்தியாகம் எதிரிகள் முன் ஓயாத புயலாய் என்றைக்கும் வீசும்*

*நீ உன் சாவினால் வளர்த்த நெருப்புத்தாலே இன்று பாரதப் படையை நீறாக்கிக்கொண்டிருக்கிறது.*

*இந்தியப்படை, விடுதலைப் புலிகளைக் கைது செய்யும் போது பாய்ந்து "சயனைட்" இருக்கிறதா என்று பார்த்து- இருந்தால் பறித்து எடுக்கிறதாம்.*

*சயனைட்டைச் சாப்பிட்டால் தான் சாவு வருமா - சாப்பிடாமல் இருந்தே எங்களுக்குச் சாகத்தெரியும் என்று நீ அவர்களுக்குச் சவால் விட்டாய்*

*பிரபாகரன் வளர்த்த புலியே! உன் பின்னால் எத்தனைபேர் எத்தனைபேர் நீ போன இடத்துக்கு வந்து விட்டார்கள் பார்...*

*நீ ஒரு நீரோட்டம் - உன்னோடு ஒரு தலைமுறையே இழுபட்டு வரும்.*

*உன் உண்ணாவிரதத்தின் பின்பு தமிழீழத்துப் பெண்கள் தியாகம் செய்யவே பிள்ளைகளைப்பெறுகிறார்கள்.*

*மேடையில் தமிழீழத்திற்காகச் சாவேன்?' என்று பேசியவன் இருக்கிறான் - நீ மேடையில் தமிழீழத்திற்காகவே மரணித்தாய்.*

*உன் முடிவினால் தமிழீழம் புத்துயிர் பெற்றது. 'விடுதலை' எத்தனை பெரியது என்பதற்கு உன் மரணம் ஒரு விளக்கம்.*

*திலீபன் ..*

*நீ தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தொடர் சக்தி.*



*'எல்லாம் முடிந்து விட்டது' என்று பலரும் ஓய்ந்த நேரத்தில் 'ஒன்றும் முடிந்து விடவில்லை என்று காட்டிய வெளிச்சம்.*

*அமைதியான காலம் ஒரு விடுதலைப்போராட்டகாலத்தில் இல்லை என்பதை நீ அமைதியான உன் சாவினால் நிருபித்தாய்.*

*இந்தியா உணவுப் பொட்டலம்போட்டகாலத்தில் உண்ணாவிரதம் இருந்த உன் சாவு எங்கள் விடுதலைப்பசிக்கு என்றைக்கும் உணவாகும்,*

*எவ்வளவு பெரிய ஆற்றலையும் நிமிர்ந்து மோதும் பெரிய சக்தி உன்னால் எங்களுக்குத்தரப்பட்டது; நாங்கள் பயன்படுத்துகின்றோம்.*

*இந்தியப் போர் விமானங்கள் புலிகளை அழிக்க முடியாமல் வெட்கத்தோடு இங்கே தரையிறங்குகின்றன.*

*திலீபன்... உன் இலட்சியத்திற்கு உன் மரணத்தின் பின்னும் வெற்றி தேடித் தருகின்றாய்*

*உன்னை நாங்கள் பின் பற்றுவோம்.*

*தமிழீழ மண்ணில்எதிரிகளின் இரும்புச் செருப்பின் ஓசை கேட்கும் போதெல்லாம்...*

*இளைஞர்களைப் போருக்கு அழைக்கும் விடுதலைப் புலிகளின்துண்டறிக்கைகள்காற்றில் பறக்கும் போதெல்லாம்...*

*நெடிய பனைமரங்களின் கீழ் உட்கார்ந்து எமது விடுதலை பற்றி நாங்கள் பேசும் போதெல்லாம்...*

*நாங்கள் உன்னை நினைப் போம்,*

*நாங்கள் நீ ஆவோம்.*

நன்றி: தமிழீழம்

### வளைகுடாவுக்கான அமெரிக்க

## விமானப் படைத் தளபதி மைக்கல்டகன் பதவி நீக்கம்

*(வாஷிங்டன்)*

ஈராக் மீதான அமெரிக்கப் போர்த்திட்டத்தை வெளியிட்டதற்காக வளைகுடாவில் உள்ள அமெரிக்க விமானப் படைத்தளபதி மைக்கல்டகன் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தளபதி மைக்கல் டகன் வாஷிங்டன் போர்ட் பத்திரிகைக்கு ஈராக்மீதான போர்த் திட்டத்தையும், சதாம் உசைனை அழிக்கும் திட்டத்தையும் இரு நாட்களுக்கு முன் தெரிவித்திருந்தார் என்பது தெரிந்ததே.

## ஐரோப்பிய சமூகத்தில் இருந்தும் ஈராக்அதிகாரிகள் வெளியேற்றம்

*(பாரிஸ்)*

ஐரோப்பிய சமூக நாடுகளைச் சேர்ந்த சகல நாடுகளிலும் இருந்தும் ஈராக்கிய தூதுவராலய பாதுகாப்பு அதிகாரிகளை வெளியேற்றுவது என அந்நாடுகளின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் தீர்மானம் எடுத்துள்ளனர் அதேவேளை பிரான்ஸ், இத்தாலி என்பனவற்றைத் தொடர்ந்து பிரிட்டனும் அதிகாரிகளை வெளியேற்றியுள்ளது.

ஈராக்கின் கட்டுப்பாட்டினுள் உள்ள குவைத்தில் உள்ள பிரான்ஸ், இத்தாலி நாடுகளின் தூதரகங்களுக்குள் ஈராக்கிய இராணுவம் புகுந்ததைத் தொடர்நதே இந்நடவடிக்கை மேற்கொள்ளபபட்டது.

அதேவேளை இக்குற்றச்சாட்டை ஈராக் மறுத்துள்ளது.

## இந்திய அதிகாரிகளே விநியோகிக்கலாம்

*(பாக்தாத்)*

இந்தியாவில் இருந்து வரும் கப்பலில் உள்ள உணவுப் பொருள்களை இந்திய அதிகாரிகள் தவிர வேறு ஒருவரும் விநியோகிக்கப் போவதில்லை என ஈராக் அரசாங்கம் அறிவித்துள்ளது.

### ஹெலிக்கு அஞ்சி பாய்ந்தவர் படுகாயம்

*(யாழ்ப்பாணம்)*

மருதனாமடம் சந்தியில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்துகொண்டிருந்த பெண்மணி மோட்டார் சைக்கிளில் இருந்து திடீரெனப் பாய்ந்ததினால் விபத்துக்குள்ளாகி தலையில் பலத்த காயத்துடன் மானிப்பாய் யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மேற்படி விபத்து ஹெலிக்கொப்டர் அப்பகுதியில் தாக்குதல் நடத்தியதால் நிலை தடுமாறியதனாலேயே அவருக்குக் காயம் ஏற்பட்டதாகவும் இணுவிலைச்சேர்ந்த 43 வயதுடைய சிவமணிஎன்ற விபத்துக்குள்ளான பெண்மணியே கூறினார். (க)

## குடிதண்ணீர் விலை திடீர் அதிகரிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் குடி தண்ணீரின் விலை அதிகரித்துள்ளது. சாட்டியில் இருந்து பெறப்படும் குடிநீரை வீடுகளில் உள்ள தொட்டிகளில் இறைத்து வைத்து விற்பனை செய்வோரிடம் ஒரு கலன் குடிதண்ணீர் இரண்டு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் ஐம்பது சதம் வரைக்கும், ஒரு குடம் தண்ணீர் ஐந்து ரூபாய் முதல் ஏழு ரூபா வரைக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் குடிதண்ணீருக்கு மாத்திரம் ஒரு குடும்பத்தில் புறம்பாக ஒருவர் சம்பாதிக்க வேண்டி இருக்கிறது எனவும் ஏராளமான பணம் இன்றைய இக்கட்டான காலத்திலும் தண்ணீருக்காக செலவழிக்க வேண்டி உள்ளது எனவும் இப்பகுதி மக்கள் விசனப்படுகின்றனர். (க.22)

## ஆஸ்பத்திரித் தேவைக்கு உண்டியல் குலுக்கல்

*(பருத்தித்துறை)*

பருத்திதுறைஆதாரனவைத்தியசாலையில் வைத்திய சேவைக்கு எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கு உண்டியலில் பணம் சேர்க்கும் முறைஆரம்பிக்கப்பட்டுள்ளது நேற்று முன்தினம் ஆரபித்து வைக்கப்பட்ட உண்டியலில் பணம் சேர்க்கும் முறைக்கு நேற்று வரை (நாற்பத்து இரண்டு மணி நேரத்தில்) ரூபா இரண்டு ஆயிரத்து இருநூறு சேர்க்கப்பட்டது. (நி)

# வவுனியாவில் சிவில் நிர்வாக முயற்சி தோல்வியில்

(வவுனியா)

வவுனியாவில் சிவில் நிர்வாகத்தை இராணுவத்தின் மூலமும், பொலிஸ் மூலமும் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் அரசு கொண்டுவர எடுக்கும் முயர்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைவதாகவும், இராணுவ நடவடிக்கைகளினால் பொதுமக்களுக்கும் அரச ஊழியர்களுக்கும் அச்சம் ஏற்பட்டிருப்பதே சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு தடையாக அமைவதாகவும் அரச அதிகாரிகள் மட்டத்தில் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களில் சிலரும், ஊழியர்களில் சிலரும் தமது உயிருக்கு உத்தரவாதமில்லாத நிலையிலேயே நகரப்பகுதிக்கு செல்வதாகவும், வவுனியா கச்சேரியில் உணவுப் பொருள் கொடுப்பனவு வேலையும், சமூகசேவை திணைக்களமுமே செயற்பட்டு வருவதாகவும் வவுனியாவைத்தியசாலை உட்பட பல அரசாங்கத் திணைக்களங்களும், அலுவலகங்களும் இராணுவத்தினரின் கட்டுப்பாடில்லாத நிலையில் முற்று முழுதாக இயங்க வைப்பதற்கு முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அரச அதிகாரிகள் மட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (தி)

## நடமாடும் வங்கிச் சேவை; அதிகாரிகளுக்குத் தெரியாது

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து வரும் கப்டலில் நடமாடும் வங்கிச் சேவை ஆரம்பிக்கும் விடயம் பற்றி யாழ். மாவட்ட எந்த வங்கி அதிகாரியும் எதுவும் தெரியாதநிலையில் உள்ளனர்.

இந்த வங்கிச்சேவை ஆரம்பிப்பதுபற்றி தமக்கு எந்த ஒரு விடயமும் தெரியாது. எமக்கு அந்த செய்தியும்அனுப்பிவைக்கப்படவில்லை. பருத்தித்துறைக்கு கப்பல் வந்துசேர்ந்ததும் எமது சில அலுவலகர்களை அனுப்பி இப்படியான ஒரு வங்கிச்சேவை நடைபெறுவது என்பது உண்மையா என அறிந்தபின்னரே இது பற்றி எதுவும் உறுதியாகக் கூறமுடியும். என யாழ்மாவட்ட வங்கி அதிகாரிகள் தெரிவித்தனர். (லோ)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் சண்முகநாதன்

(கல்வி அதிகாரி)

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சுந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு. சு. சண்முகநாதன் (கல்வி அதிகாரி, வேலணை) 18. 09. 1990 செவ்வாய்க்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் சுந்தரம்பிள்ளை சுப்பிரமணியம், காலம்சென்ற தங்கம்மாவின் ஏக புத்திரனும், அகிலத்திருநாயகியின் அன்புக் கணவரும், குமரன், சாந்தன், சயந்தன், வரதன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், திருமதி புனிதவதி ஆறுமுகம், திருமதி திருநாவுக்கரசு திலகவதி, செல்வி சு. பத்மாவதி, திருமதி கணேசலிங்கம் கமலாதேவி, திருமதி குணரத்தினம் லட்சுமிதேவி, திருமதி மகேந்திரநாதன் தயாநிதி ஆகியோரின் சகோதரனும். சிவபரம்சோதி, கு. அரங்கநாயகி ஆகியோரின் மைத்துனரும், Dr த. யசோதரா, Dr S. சசிதரா, வைத்திய கல்லூரி மாணவன் A. சபேசன், T. முரளீதரன் (சவூதி), T. கிரிதரன், T. ஸ்ரீதரன் ( Quick Star Photo ), T. கலாதரா, T. வசுந்தரா, T. சுமித்ரா, K. சிவானுஜா, K. சேயோன், K. சிவப்பிரியா, M. சுபேந்திரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 91/18. இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம் இல்லத்தில் இருந்து கொக்குவில் மயானத்திற்கு இன்று 19. 09 1990 புதன் கிழமை காலை 10. 00 மணியளவில் ஈமக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும். நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: தந்தை, மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர், மருமக்கள்

(R. 634)

### வேலுப்பிள்ளை சின்னத்துரை

வேலுப்பிள்ளை சின்னத்துரை காலமானார் இவர் காலஞ்சென்ற தெய்வானையின் அன்புக் கணவரும், தனலக்ஷ்மி, இராசேஸ்வரி, மசேஸ்வரன், (மின்சாரப் பகுதி, யா. மா. ச ) மனோறஞ்சிதம், (ஜேர்மனி) யோகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாக்கியநாதன், பாலகுமார், புஸ்பராணியின் அன்பு மாமனாரும், சிவசரவணபவான் (ஜேர்மனி), மோகனபவான் (ஜேர்மனி), யோகபவான் (ஜேர்மனி), கிருஷ்ணவதனி, மதிவதனி, சாந்தவதனி, ராதிகா, அகிலன், மகிந்தன், ராஜ்குமார் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 17-09-90இல் துண்டி மயானத்தில் நல்லடக்கம செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுகொள்ளவும்.

26, புங்கன்குளம் றோட், யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்.

(B-1404)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## வீரவணக்கம்

கோட்டை சிறிலங்கா இராணுவத்தின் சினைப்பர் தாக்குதலுக்கு இலக்காகி 16 ஆம் திகதி காயமடைந்திருந்த லெப்டினன்ட் ரேகா (சுசிலா சங்கரப்பிள்ளை மட்டுவில் வடக்கு சாவகச்சேரி) 17.09. 90 இல் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

கோட்டை இராணுவத்துடனான நேரடிமோதலில் இரண்டாவது லெப். நிமலன் (பாலசிங்கம்ஜெயவதனன் தும்பளை பருத்தித்துறை) நேற்று முன் தினம் வீரமரணமடைந்தார். அவருக்குப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## வீரமரணம்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லினால் வீரவேங்கை சுலக்சன் (திரு.யோகராசா தாளையடி) வீரமரணமடைந்தார். அவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்

### யாழ் வீதி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

20) தியாகரூபன் (வயது 22) மணிவண்ணன் (வயது 21) இரத்தினசிங்கம் (வயது 20) தமிழ்ச்செல்வன் (ஓட்டுமடம் வயது 32) ஆகியோர் காயம் அடைந்த நிலையில் மானிப்பாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### மணியம்தோட்ட

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்தவர்கள் உடனடியாக அம்புலன்ஸ் வண்டி மூலம் மானிப்பாய் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். சிறுகாயத்திற்கு உள்ளானவர்கள் கொழும்புத்துறை மேற்கு முதலுதவி மையத்தில் சிகிச்சை பெற்றனர். (43)

### விமானத்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)


இ. பஞ்சாட்சரம், க. சுப்பிரமணியம், திருமதி பரமேஸ்வரி கே இராசலிங்கம் ஆகியோருக்கு சொந்தமான வீடுகள் பலத்த சேதமடைந்தன. வெடிக்காத நிலையில் ஒரு குண்டும் காணப்படுகின்றது. இதே தாக்குதலில் ப நோ. கூ. சங்கபுடைவை நிலையமும், புத்தக விற்பனை நிலையமும், தனியார் கராஜ் ஒன்றுப் சேதத்திற்குள்ளாகின. வானில் 4 பொம்மர்கள்வட்டமிடுவதைக்கண்ட பொதுமக்கள் பதுங்கு குழிகளில் ஒளிந்து கொண்டதால் பாரிய உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டது

### லஞ்சம்

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுகின்றனர்.

குறிபபிட்ட தடைமுகாம்களில் ஆயிரக்கணக்கான ரூபா பணத்தைப் பறிகொடுத்தவர்கள் இத்தகவலைத் தெரிவித்துள்ளனர். (தி)




## பழைய இராணுவ முகாமிற்கு இராணுவம் தீவைத்தது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பழைய இராணுவமுகாமை நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவம் எரித்து முற்றாகச் சாம்பராக்கியது. முகாமைச் சுற்றியிருந்த பகுதிகள் புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

முகாமுக்கு அருகிலிருந்த பல நோ. கூ. சங்கத்துக்குச் சொந்தமான பெற்றோல் நிலையமும், அதிலிருந்தடீசல் 9,900லீற்றர், பெற்றோல் 6,000லீற்றர், மண்ணெண்ணெய் 8000 லீற்றர், இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டீசல் கொள்கலனும் தீப்பற்றியிருக்கலாம் என நம்பப் டுகிறது.

### திருமலை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

க்கு இந்த முஸ்லிம்சமூகவிரோதிகளேகாரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

#### தடை முகாம்கள்

திருமலை மாவட்டத்தில் அகதிகளாக்கப்பட்ட தமிழ்மக்களுக்காகஅமைக்கப்பட்டுள்ள அகதிமுகாம்கள் அனைத்தும் சுகாதார வசதிகளற்றதாகவே உள்ளன. இதனால் இம்முகாம்களில் தொற்றுநோய்கள் பரவி வருகின்றன.

மேலும் அகதிமுகாம்களைச் சுற்றி முட்கம்பி வேலிகள் அடைக்கப் பட்டுள்ளதாகவும், சூழவுள்ள கிராமங்களில் இருக்கும மக்கள் பிடித்துவரப்பட்டு அம்முகாம்களில் அடைக்கப் பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

#### பெண்கள் இம்சை

கந்தளாய்ப் பகுதி அகதி முகாம்கள் சிலவற்றில் தங்கியுள்ள தமிழ்ப் பெண்கள் இராணுவத்தாலும், சிங்கள ஊர் காவல் படையினராலும், முஸ்லிம் சமூக விரோதிகளாலும் இம்சிக்கப்படுவதாகவும், சமூக ஒழுக்கநெறிமுறைகளுக்கு அப்பாற்பட்டு நடத்தப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

#### அறுவடைக்குத் தடை

மேலும் தம்பலகாமப் பகுதியில் தமிழர் விளைநிலங்களில் இருந்து தமிழர் பயிர் அறுவடை செய்வதைஇராணுவம் தடுத்துள்ள அதேவேளை அவ் விளைநிலங்களில் முஸ்லிம் சமூக விரோதிகள் அறுவடை செய்கின்றார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

#### புல்டோசரால் வீடுகள் தகர்ப்பு

அதேவேளை திருமலை நகர்ப் பகுதியிலும் தமிழரின் வீடுகள் இராணுவத்தினராலும், சிங்கள ஊர்காவற்படையினாலும் முஸ்லிம் ஊர்காவற் படையினாலும் கொள்ளையடிக்கப்படுகின்றன. திருமலை நகரில் மட்டும் இராணுவம் 1057 தமிழரின் வீடுகளை புல்டோசர் கொண்டு தரைமட்டமாக்கியுள்ளது

அதேவேளை எந்தச் சமூக நலஅமைப்புக்களும் இவ்வகதி முகாம்களை வந்து பார்வையிடவோ, உதவி வழங்கவோ இல்லை எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாக்குதல்

காங்கேசன் துறை, அளவெட்டி பகுதியில் உள்ள பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது ஹெலிகொப்ரர் நேற்று மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தியது.

### மதவாச்சி

தொடர்ந்து தீப்பெட்டி, மின்கலம், எரிபொருட்கள், பாக்கு போன்ற பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (தி)

### இராணுவ

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்றுவிட்டனர்.

இதேசமயம் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர்பிரிவில் ஐந்து கிராமசேவையாளர் பிரிவுகளில் மட்டுமே மக்கள் உள்ளனர். மிகுதி இடங்களில் வாழ்ந்துவந்த மக்கள் அனைவரும் சாளம்பைக்குளம், படுக்கோயில், பம்பைமடு போன்ற இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர் என்று அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தி)

## மரண அறிவித்தல்

### துரைசிங்கம் மகிழ்மலர்

மானிப்பாய் தெற்கைச் சேர்ந்த திருமதி துரைசிங்கம் மகிழ்மலர் 16. 09. 90 இல் காலமானார். இவர் துரைசிங்கத்தின் அன்பு மனைவியும். ஜெயசிங்கம், தனபாலசிங்கம் (ஜேர்மனி), ஜெயபாலசிங்கம், ஜெயமலர், திருமதி த. இன்பமலர், குணசிங்கம், குணரத்தினசிங்கம் (கனடா), தவராஜசிங்கம் (ஜேர்மனி), பிரேம்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியலக்சுமி, சரஸ்வதிதேவி, சோதிமலர், த. சுப்பிரமணியம் (சவுதி), லதா ஆகியோரின் அன்புமாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17 - 09 - 90 திங்கட் கிழமை மாலை 2. 30க்கு இடம் பெற்றது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் ஏற்றுக்கொளளவும்.

லோட்டன் றோட், மானிப்பாய்.

தகவல்: சி, துரைசிங்கம் (R-636)